தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறித்து, ஜனநாயகத்தைப் படுகொலை செய்யும் நோக்கோடு

# அவசரகதியில் நடைபெறுகிறது எஸ்.ஐ.ஆர்!

## நாடாளுமன்றத்தில் தயாநிதி மாறன் உரை!



புதுடெல்லி, டிச.11–

**நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரில் நேற்று, எஸ்.ஐ.ஆர். எனப்படும் வாக்காளர் சிறப்பு திருத்தம் தொடர்பாக விவாதம் நடைபெற்றது. அப்போது, கழக உறுப்பினர் தயாநிதி மாறன் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறித்து, ஜனநாயகத்தைப் படுகொலை செய்யும் நோக்கோடு அவசரகதியில் மேற்கொள்ளப்படும் எஸ்.ஐ.ஆர்–க்கு எதிராக உரையாற்றினார்.**

இது குறித்து அவர் பேசியதாவது: –

நடுநிலை தேவை. குறிப்பாக, நம்மை தேர்ந்தெடுக்கின்ற, நாடாளுமன்றத்தை தேர்ந்தெடுக்கின்ற, சட்டமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க நடத்தப்படுகின்ற தேர்தல்கள், நடுநிலையுடன் நடத்தப்பட வேண்டும். அதுதான் தேர்தல் ஆணையத்தின் வேலை. ஆனால், பா.ஜ.க ஆட்சி என்றைக்கு வந்ததோ அன்றுமுதல் தேர்தல் ஆணையம் மீதுள்ள நம்பிக்கை மக்களிடம் குறைந்துவிட்டது. மக்களிடம் மட்டுமல்ல அரசியல்வாதிகளிடமும் தேர்தல் ஆணையம் மீது சந்தேகம் வந்துவிட்டது. இதற்கு உதாரணமாக ஒன்றை சொல்கிறேன்.

2014ஆம் ஆண்டு தேர்தலில் பாஜக ஆட்சிக்கு வந்தது. அப்போது தமிழ்நாட்டில் அதிமுகவுடன் மறைமுக கூட்டணி வைத்தது பாஜக. அப்போது இருந்த அம்மையார், தான் துணை பிரதமராக வரவேண்டும் என்பதற்காக பணப்பட்டுவாடா செய்தார். இதை எதிர்த்து தேர்தல் ஆணையத்திடம் புகார் கொடுத்தோம். அப்போது அதை தடுக்காத தேர்தல் ஆணையம், 144 தடை உத்தரவு மட்டும் போட்டு பணம் கொடுப்பதை மறைமுகமாக ஆதரித்தது. அப்போது திமுக கூட்டணியிலிருந்து ஒரு வேட்பாளர்கூட மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதுபற்றி ஏற்கனவே இந்த அவையில் சுட்டிக்காட்டியுள்ளேன்.

**பிரதமரின் தியானம்!**

அதுமட்டுமில்லை. தேர்தல்கள் நியாயமாக நடைபெறுகிறதாம்! எங்கே? 2019 தேர்தலில் பல கட்டங்களாக வாக்குப்பதிவு நடந்தது. இறுதிக் கட்ட வாக்குப் பதிவிற்கு முந்தைய இரண்டு நாட்களுக்கு எந்த பிரச்சாரமும் செய்யக்கூடாது. அமைதி காத்திடவேண்டும். ஆனால் பிரதமர் மோடிக்கு மட்டும் கேதர்நாத் சென்று தியானம் செய்ய தேர்தல் ஆணையம் சிறப்பு அனுமதி அளிக்கிறது. அதற்கு பிரதமர் மோடியும் நன்றி சொன்னார். எதற்காக அந்த நன்றி என்றால் அந்த இரண்டு நாட்களும் இந்திய தொலைக்காட்சிகள் அனைத்திலும் பிரதமர் முகமே வந்துகொண்டிருந்தது. பிரச்சாரம் செய்யக்கூடாது என்று சொல்லிவிட்டு மறைமுகமாக பிரச்சாரம் செய்ய ஊக்குவித்தது தேர்தல் ஆணையம்தான். கேதர்நாத் தியானத்தை முடித்துக்கொண்டு, 2024ஆம் ஆண்டு தேர்தலின்போது தமிழ்நாட்டுக்கு வந்த பிரதமர் மோடி , கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் சிலையில் அமர்ந்து இரண்டு நாட்கள் தியானம் செய்தார். அப்போதும் இரண்டு நாட்களுக்கு தொலைக்காட்சியில் அவர் முகம்தான் வந்தது. இதுதான் தேர்தல் ஆணையத்தின் நியாயமா?

ஒவ்வொரு முறையும் தேர்தல் நடக்கும்போது பணப் பட்டுவாடா நடப்பதாக மற்ற கட்சிகளை குறிவைத்து பணப் பறிமுதல் செய்யும் தேர்தல் ஆணையம், பாஜக மற்றும் அதன் கூட்டணி வேட்பாளர்களை கண்டுகொள்வதேயில்லை. தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கு நாங்களும் துணை நிற்கிறோம். ஆனால் உண்மையான வாக்காளர்கள் பட்டியல் திருத்தம் வேண்டும். இரண்டு இடங்களில் பதிவாகியிருக்கும் வாக்காளர் பெயர் வேண்டாம். இறந்தவர்களின் பெயர்களை நீக்குங்கள். இதில் எங்களுக்கு எந்த மாற்றுக்கருத்தும் இல்லை.

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தமிழ்நாட்டுக்கு வந்து ஒரு தொகுதியில் 7 ஆயிரம் வாக்குகள் போலி வாக்குகள் உள்ளது என்று சொல்கிறார். ஆடு நனைகிறது என்று ஓநாய் அழலாமா? உங்களுக்கு ஏன் அந்த அக்கறை? நீங்களும் தேர்தல் ஆணையமும் தெரிந்துதானே வேலை செய்கிறீர்கள். இத்தனை ஆண்டுகளாக கும்பகர்ணனை போல தூங்கிக்கொண்டு இருந்த தேர்தல் ஆணையம், வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தை மூன்று மாதங்களில் செய்து முடிக்க நினைப்பது ஏன்? ஆறு மாத காலம் எடுத்துக்கொண்டால் என்ன? அவசரம் காட்டுவதன் காரணம் என்ன?

இதை பார்க்கும்போது எங்களுக்கு அச்சம் வருகிறது. அது என்னவென்றால்... 2016ஆம் ஆண்டு நவம்பர் 8ந்தேதி தொலைக்காட்சியில் தோன்றிய பிரதமர் மோடி . இனி ரூ.1000, ரூ.500 நோட்டுகள் செல்லாது என்று அறிவித்தார். அதேபோல்தான் கடந்த நவம்பர் 4–ஆம் தேதி வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரை புதிதாக பதிவு செய்தால் மட்டுமே வாக்களிக்கும் உரிமை உண்டு என்றார். இப்படி வாக்குரிமையை இரவோடு இரவாக பிடுங்கிக்கொண்டால் எங்களுக்கு அச்சம் வராதா? இது போன்ற சிந்தனையெல்லாம் பிரதமர் மோடிக்கு மட்டும்தான் வரும். இதனால் எத்தனை பேர் உயிரிழந்துள்ளனர்.. எஸ்.ஐ.ஆர் பணியில் ஈடுபட்ட பணியாளர்களில் 29 நாட்களில் 47 பேர் உயிரிழந்துள்ளனர். நீங்கள் எடுத்த ஒவ்வொரு முடிவுகளால் ஏழை மக்கள் தானே உயிரிழக்கின்றனர்?

**மக்கள் மீது தேவையற்ற சுமை!**

தேர்தல் ஆணையம் நியாயமாக நடக்கவேண்டும் என்று நினைத்தால் முதலில் சில தொகுதிகளிலோ அல்லது ஒரு மாநிலத்திலோ செயல்படுத்தி அதில் வெற்றியாகும் நிலையில் பிற மாநிலங்களில் அதனை நடைமுறைப்படுத்தலாம். பீகார் தேர்தலில்போது எத்தனை லட்சம் போலி வாக்காளர்கள் இருந்தார்கள்? அதை சரி செய்தீர்களா? மணலை கயிறாக திரிப்போம் என்று சொன்னீர்களே என்ன வாயிற்று? தன் கடமையிலிருந்து தவறிய தேர்தல் ஆணையம் மக்கள் மீது தேவையற்ற சுமையை ஏற்றுகிறது.

திருமணம் செய்யக்கொள்ள, விவாகரத்து செய்ய, வாகனம் ஓட்ட, கல்லூரியில் படிக்க, வங்கியில் கணக்கு துவங்க, அரசு வேலைக்குச் செல்ல எல்லாவற்றுக்கும் மேலாக இறந்தால்கூட பிணத்தை அடக்கம் செய்ய என்று எல்லாவற்றுக்கும் ஆதார் தேவைப்படும்போது தேர்தல் ஆணையம் ஆதாரை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்றது. எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து உச்சநீதிமன்றம் மூலம் ஆதாரை கொண்டு வந்தோம். ஆதாரை இணைத்தால் மக்கள் கணக்கெடுப்புக் கூட தேவையில்லை. ஆனால் எதற்காக பாஜக அரசு பயப்படுகிறது? அதனால்தான் எங்களுக்கு அச்சம் எழுகின்றது! உங்கள் உள் நோக்கம் திருட்டு வழியிலே ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்பதுதான்.

ஒரு மாநிலத்தில் தேர்தல் வருகிறது என்றால் 6 மாதங்களுக்கு முன்பு அங்கு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா வந்துவிடுவார். வருவாய் துறை, சிபிஐ வருகிறது என மிரட்ட ஆரம்பித்துவிடுவார். இதற்கு ஒரு மேமே வைத்திருக்கிறார்கள். இதை கண்டு கொள்ளாத, கண்டிக்காத தேர்தல் ஆணையம், மக்களை புண்படுத்தும் வேலையை செய்கிறது.

எங்கள் தமிழ்நாடு அமைதிப்பூங்கா. அதைக் கெடுக்க என்னென்னவோ செய்து பார்க்கிறார்கள். அயோத்தியில் செய்த வேலையை திருப்பரங்குன்றத்தில் செய்யப் பார்க்கிறார்கள். திராவிட முதல்வர். முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கும்வரை உங்கள் பாச்சா பலிக்காது. உங்களை ஒருபோதும் உள்ளேவரவிடமாட்டோம்!

அய்யா! எங்களுக்கோர் பெரிய அச்சம் இருக்கிறது! தேர்தல் ஆணையம் என்ன சொல்கிறது? மூன்று கட்டங்களாக வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையை திருப்பி பெறலாம் என்கிறது. அதாவது..1987 ஜூலை மாதத்திற்கு முன்பு பிறந்திருந்தால் இரண்டு ஆவணங்களில் ஏதாவது ஒன்றையும் 1987 ஜூலை முதல் 2004ஆம் ஆண்டுக்குள் பிறந்தவர்கள் மூன்று ஆவணங்களில் ஏதாவது ஒன்றையும் 2004 ஆம் ஆண்டுக்கு பிறகு பிறந்தவர்கள் வாக்குரிமையை திரும்பப் பெற 13 ஆவணங்களில் ஏதாவது ஒன்றையும் தரலாம் என்று சொல்கிறது. அதில் 13வது ஆவணமாக குறிப்பிட்டுள்ளதில், “பீகார் வாக்காளர் திருத்த பட்டியலில் பெயர் முறையாக சேர்க்கப்பட்டிருப்பவர்கள் எந்த மாநில தேர்தலிலும் வாக்களிக்கலாம்” என்று உள்ளது. இது என்ன நியாயம் ?.

**பின் வாசல் வழியாக**

பீகார் தேர்தல் நடந்து ஒரு மாதம்கூட ஆகவில்லை. தமிழ்நாட்டில் வருகிற ஏப்ரல் மாதம் தேர்தல் நடக்கவுள்ளது. அப்படி இருக்கும்போது பீகாரில் வாக்களித்தவர் தமிழ்நாட்டில் வாக்களிக்கலாமா? வந்தாரை வாழ வைக்கும் தமிழகத்திற்கு வந்த சோதனை இது. ஒருகோடி பீகார் மக்கள் எங்கள் தமிழ்நாட்டில் நல்ல முறையிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் பாஜக ஆளும் எந்த மாநிலத்திலும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. அவர்களுக்கு வேறெங்கும் நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. அவர்கள் வாழ்வாதாரம் நல்ல முறையில் முன்னேற வேண்டும் என்று அவர்கள் எங்கள் திராவிட மாடல் தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள். அந்த ஒருகோடி வாக்குகள் தமிழ்நாட்டு தேர்தலில் சேர்க்கப்படும் என்றால் எங்களுக்கு அச்சம் வாராதா? பின்னர் எதற்கு தேர்தல் ஆணையம்? நீங்கள் நியாயமாக நடந்துகொள்கிறீர்களா? இல்லை மறைமுகமாக பாஜகவிற்கு வேலைசெய்கிறீர்களா? ஒருகோடி பேரை எதற்காக பீகாரிலும் வாக்களிக்கலாம். அதே வாக்குச்சீட்டை எடுத்துக் கொண்டு தமிழ்நாட்டிலும் வாக்களிக்கலாம் என்றால் உங்கள் உள்நோக்கம் வெளிப்படையாக தெரிகிறது. நீங்கள் என்ன தான் பின்வாசல்வழியில் தமிழ்நாட்டை கைப்பற்ற நினைத்தாலும், தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் உங்களை விடமாட்டார்கள்.

வளர்ந்த நாடுகள் யாருமே பயன்படுத்தாத ஒரு தொழில்நுட்பத்தை வைத்து நிலவுக்கு செயற்கைகோளை அனுப்பியதற்காக இந்தியாவை உலகமே பாராட்டியது. அப்போது இஸ்ரோவில் பணியாற்றியவர்கள் பல்வேறு மாநிலத்திலிருந்து வந்தவர்கள். ஆனால் மின்னணு வாக்கு இயந்திரத்தை பார்த்தாலே எங்களுக்கு அச்சமாகவுள்ளது. அதன் உரிமையாளர் யார்? அதற்குள் என்ன இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. யாருக்கு ஓட்டு போட்டாலும் பாஜகவுக்குத்தான் விழுகிறது என்கிறார்கள். அமெரிக்காவில், ஜப்பானில், ஜெர்மனி போன்ற வளர்ந்த நாடுகளில் கூட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் இல்லை. இங்கே நீங்கள் மட்டும் ஏன் அதை தலையில் வைத்துக்கொண்டு ஆடுகிறீர்கள்? வாக்குச் சீட்டை பார்த்தால் நீங்கள் ஏதோ தவறு செய்கிறீர்கள் என்று எங்களுக்கு சந்தேகம் வரத்தானே செய்யும்?

**எஸ்.ஐ.ஆர் தேவை இல்லை!**

வாக்குப்பதிவு முறையில் தயவு செய்து நீங்கள் வளர்ந்த நாடுகளை பின்பற்றுங்கள். எங்களுக்கு தேவை நியாயமான தேர்தல்; நியாயமான தேர்தல் ஆணையம். அனைத்து துறைகளிலும் ஆர்.எஸ்.எஸ் ஆட்கள் தான் இருக்கிறார்கள். அவர்கள் இருக்கும்போது நடுநிலையுடன் இருக்கவேண்டிய அரசு துறைகள் நடுநிலையுடன் நடக்குமா? தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலை சீர் செய்ய நினைக்கிறது. ஆனால் தேர்தல் ஆணையம் எப்போது சீர் செய்யப்படப்போகிறது? இது என்னுடைய கேள்வி மட்டுமில்லை; இந்திய மக்களின் கேள்வியும் இதுதான். நியாயன முறையில் தேர்தல் நடக்க அவசரகதி வேண்டாம்.

தயவு செய்து எஸ்.ஐ.ஆரை நிறுத்துங்கள். எஸ். ஐ.ஆரே தேவையில்லை. அனைத்து குளறுபடிகளையும் சரிசெய்து விட்டு 6 மாதங்கள் அவகாசம் எடுத்து நல்ல முறையில் சீர்திருத்தங்களை நடத்துங்கள்.

பாவம், இந்தி பேசும் மக்களை பாஜக ஏமாற்றலாம். ஆனால் தமிழ்நாடு மக்களை நீங்கள் ஏமாற்ற முடியாது, திராவிட மக்கள் ஒருபோதும் ஏமாறவும் மாட்டார்கள்!

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. குறிப்பிட்டார்.





நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை வட்டம் குலவணிகர்கிராமம் பொருநை அருங்காட்சியகப் பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா. சுகுமார்,நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ,கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மைதீன்கான், முன்னாள் எம்.பி. ஞானதிரவியம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநகர பொறுப்பாளர்கள் சுப்பிரமணியன், தினேஷ்,தொல்லியல் துறை இயக்குனர் யத்தீஷ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.அதனை தொடர்ந்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் — டிச.20ல் திறந்து வைக்கிறார்!

# பாளையங்கோட்டை - குலவணிகர் கிராமம் ‘பொருநை அருங்காட்சியகம்’ பணிகள்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு — தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு!

நெல்லை, டிச.11-

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர்கிராமம் பொருநை அருங்காட்சியக பணிகளை நகராட்சி நிர்வா கத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நிதி மற்றும் சுற்றுச் சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ., கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம் பெல் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ., திரு நெல்வேலி மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, தொல்லியல் துறை இயக்குநர் து.யத்தீஷ் குமார் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (09.12.2025) பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

தமிழ்நாட்டின் தொன்மையான வரலாற்றினை உலகறியச் செய்யும் பொருட்டு கொற்கை, ஆதிச்சநல்லூர், சிவகளை ஆகிய இடங்களில் கிடைத்த தொல் பொருட்களை காட்சிப்படுத்திட திருநெல்வேலி மாவட்டம் குலவணிகர்புரம் கிராமத்தில் அருங் காட்சியகம் அமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் *18.05.2023* அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. பொதுப்பணித்துறை சார்பில் *ரூ.56.60 கோடி மதிப்பீட்டில் 13 ஏக்கர் நிலத்தில் 54 ஆயிரம் சதுர அடியில் ஆதிச்சநல்லூர் தொகுதி A மற்றும் B கட்டடம் 16,486 சதுர அடியில் தரைதளம் மற்றும் முதல் தளமும், சிவகளை கட்டடம் 8,991 சதுர அடியில் தரைதளம், முதல் தளமும், கொற்கை தொகுதி A மற்றும் B கட்டடம் 17,429 சதுர அடி தரைதளம், முதல் தளத்துடன் கட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன.*

மேலும், ஒவ்வொரு கட்டடத்திற்கு இணைப்பு சாலை அமைக்கவும், அழகுநிறைந்த குளமும், குளத்தின் மீது பாலம் அமைக்கவும், சுற்றுச்சுவர், பூங்காக்கள், வண்ண விளக்குகள், நீறுற்று, சுற்றுச் சூழல் திறந்த வெளி திரையரங்கு அமைப்புகள், திறந்தவெளி கூட்டரங்கம் போன்ற பல்வேறு பணிகள் மக்களை கவரும் வகையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.வயதானவர்கள் சென்று பார்க்கும் வகையில் பேட்டரியால் இயங்கும் வாகன வசதி செய்துதரப்படவுள்ளது. தொல்லியல் துறையின் மூலம் ரூ.6 கோடி மதிப்பில் காட்சிப்படுத்தும் கூடங்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, காட்சிப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு பொருநை அருங்காட்சியகம் பொதுமக்களின் பார்வைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் வரும் *20.12.2025* அன்று திறந்து வைத்து, பார்வையிடவுள்ளார்கள்.

தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நடைபெறும் விழாவில் கலந்து கொண்டு, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும்,புதிய திட்டப்பணி களுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்கள்.

மேலும், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறவுள்ள திருநெல் வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தினை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு,நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் மு.துரை, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், கண்காணிப்பு பொறியாளர் ஸ்ரீதரன், முன்னாள் அமைச்சர் டி.பி.எம் மைதீன்கான், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ச.ஞானதிரவியம், ஆ.பிரபாகரன், ஏ.எல்.எஸ். லெட்சுமணன், பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன், நடராஜன், சாந்தி சுபாஷ்,மாநகர பொறுப்பாளர்கள் சு.சுப்பிரமணியன் (மேற்கு) தினேஷ் (கிழக்கு) மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாநகர துணை செயலாளர் சுதா மூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் செல்வ கருணாநிதி, அலெக்ஸ் அப்பாவு, ஆரோக்கிய எட்வின், கண்ணன், அன்பழகன், அருள்மணி, மாரியப்பன், சுபாஷ் தங்கபாண்டியன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டையப்பன், செல்வசூடாமணி, பிரேம் ஆனந்த், அனிதா, மண்டலத் தலைவர்கள் கதீஜா இக்லாம் பாசிலா, பிரான்சிஸ், இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், பகுதி பொறுப்பாளர் அண்டன் செல்லதுரை, கீர்த்தி சுரேஷ், மாமன்ற உறுப்பினர் ஜூலியட் மேரி, விவசாய தொழிலாளர் அணி தலைவர் செண்டு, உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# 8-வது ஊதியக்குழு செயல்படுத்தும் தேதியை தெளிவுபடுத்துங்கள்!

## ஒன்றிய நிதி அமைச்சரிடம் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கோரிக்கை மனு!



*புதுடெல்லி, டிச. 11 -*

*அரசுப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களிடம் பெரும் எதிர்பார்ப்பு ஏற்படுத்தியுள்ள 8-வது ஊதியக்குழு குறித்து ஒன்றிய அரசின் அதிகாரப் பூர்வ நிலைப்பாட்டை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் என தென்சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கோரிக்கை விடுத்துள்ளார்.*

*டெல்லியில் ஒன்றிய நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீத்தாராமனைச் சந்தித்து, எழுத்து மூலமான மனுவை அளித்தார். அந்த மனுவில்,*

*“8-வது ஊதியக்குழு எப்போது அமைக்கப்படும்? அதன் அமல்படுத்தும் காலக்கெடு குறித்து இது வரை எந்தத் தெளிவான அறிவிப்பும் இல்லை. இதனால் அரசு ஊழியர்களும், குறிப்பாக ஓய்வூதியதாரர்களும் கவலை வெளிப்படுத்துகின்றனர்.*

*சென்னை ஓய்வூதியர் சங்க பிரதிநிதிகள் என்னை நேரில் சந்தித்து, ‘திருத்தப்பட்ட ஓய்வூதியப் பலன்கள் முன்னர் ஓய்வுபெற்றவர்களுக்கும் வழங்கப்படுமா?’ என்ற ஐயப்பாட்டை முன்வைத்தனர். முன் நடைமுறைகளைப் போலவே, திருத்தப்பட்ட ஊதிய அளவீடுகள் ஏற்கனவே உள்ள ஓய்வூதியதாரர்களுக்கும் நீட்டிக்கப்படும் என உறுதியளிக்க வேண்டும்.*

*ஊதிய திருத்தம் குறித்த அதிகாரப்பூர்வ நிலைப்பாட்டை ஒன்றிய அரசு உடனடியாக வெளியிட்டு, ஓய்வூதியதாரர்களிடையே நிலவும் பதட்டம் மற்றும் குழப்பத்தைத் தணிக்க வேண்டுகிறேன்” என தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.*

*மனுவைப் பெற்ற மத்திய நிதி அமைச்சர், இதுகுறித்து உரிய துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*அரசுத் துறையில் பணிபுரிபவர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த 8-வது ஊதியக்குழு அறிவிப்பை எதிர்நோக்கும் நிலையில், எம்.பி. வழங்கிய இந்த கோரிக்கை பணியாளர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.*

# மகாகவி பாரதியார் 144- வது பிறந்த நாள்!

## திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள் இன்று மாலை அணிவிக்கின்றனர்!

சென்னை, டிச. 11-

மகாகவி பாரதியார் அவர்களின் 144வது பிறந்த நாளை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள், இன்று (11.12.2025) காலை 9.30 மணியளவில் சென்னை, மெரினா கடற்கரை, காமராசர் சாலையில் அமைந்துள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

மகாகவி பாரதியார், 11.12.1882 அன்று தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில், சின்னச்சாமி ஐயர் - இலட்சுமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவரது கவிப் புலமையைப் பாராட்டி எட்டயபுர மன்னர் இவருக்கு, “பாரதி” என்று பட்டம் வழங்கினார். நவீன தமிழ்க் கவிஞர்களின் முன்னோடியாகவும், தமிழ் மொழியில் சிறந்த இலக்கியவாதியாகவும் திகழ்ந்த இவர், “மகாகவி” எனப் போற்றப்படுகிறார். தந்தை இறந்த பிறகு சில காலம் பாரதியார் காசியில் தம் அத்தை வீட்டில் வளர்ந்தார். பின்னர், தமிழ்நாடு திரும்பினார்.

மகாகவி பாரதியார் தமிழ், இந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளில் புலமை பெற்று விளங்கினார். எனவே தான், “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்று தமிழின் பெருமையை உலகறியப் புகழ்ந்து பாடினார்.

மதுரை சேதுபதி பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். 1904 முதல் 1906 வரை, “சுதேசமித்திரன்” பத்திரிகையில் பணியாற்றினார். 1907 ஆம் ஆண்டு, “இந்தியா” என்ற வார இதழையும், “பாலபாரதம்” என்ற ஆங்கில இதழையும் பொறுப்பேற்று நடத்தினார்.

“கண்ணன் பாட்டு”, “குயில் பாட்டு”, “பாஞ்சாலி சபதம்” போன்ற காவியங்களைப் படைத்தார். கீதையைத் தமிழில் மொழி பெயர்த்தார். மகாகவி பாரதியார் தமிழ்ப்பற்று, தெய்வப் பற்று, தேசப்பற்று, மானுடப் பற்று ஆகிய நான்கும் கலந்தவர். மகாகவி பாரதியார் மறைந்து நூறு ஆண்டுகள் ஆகியும், தமிழ்ச் சமுதாயத்திற்காக அவர் விட்டுச் சென்ற கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அவற்றைப் படிப்பவர் உள்ளத்தை ஈர்த்து உயிரோட்டமாய் உலவும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், மகாகவி பாரதியார் அவர்களை “மக்கள் கவி” என்று போற்றினார். மகாகவி பாரதியார் அவர்களின் பாடல்கள் மக்களிடையே சுதந்திரக் கனலை மூட்டியதால் ஆங்கிலேய அரசு அவரைக் கைது செய்ய முயன்றது. ஆனால், பாரதியார் ரயில் மூலம் தப்பி பிரெஞ்சு நாட்டு ஆதிக்கத்தில் இருந்த புதுச்சேரி சென்று வாழ்ந்தார். பின்னர், சென்னை, திருவல்லிக்கேணியில் வசித்து வந்த அவர் 1921ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் நாள் மறைந்தார். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக வீற்றிருந்தபோது கொண்டாடப்பட்ட இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது, 1968 ஜனவரி இரண்டாம் நாள் அன்று சென்னை கடற்கரையில் திறந்து வைக்கப்பட்ட 10 தமிழ்ச் சான்றோர்களின் சிலைகளில் மகாகவி பாரதியார் அவர்களின் சிலையும் திறந்து வைத்துப் போற்றப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்த இல்லத்தைத் தமிழ்நாடு அரசின் சார்பில், 12.5.1973 அன்று அரசுடைமையாக்கி அதனை நினைவு இல்லமாக மேம்படுத்தித் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகாகவி பாரதியாரின் நினைவுகளைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாகச் செப்டம்பர் 11 ஆம் நாள் ஆண்டுதோறும் மகாகவி நாள் - எனக் கடைப்பிடிக்கப்படும் என 10.9.2021 அன்று அறிவித்து; 14 அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அவற்றுள் பாரதி இளம் கவிஞர் விருது, தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள், கட்டுரைகளைப் புத்தகமாக வெளியிடுதல், காசியில் அவர் வாழ்ந்த வீடு அரசின் சார்பில் பராமரிக்கப்பட நிதியுதவி வழங்குதல், பாரதியார் படைப்புகளை நாடகங்களாகவும், குறும்படங்களாகவும் வெளியிடுதல் முதலியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

மகாகவி பாரதியார் பிறந்த நாளான, டிசம்பர் 11ஆம் நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாகத் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டின் மகாகவி பாரதியார் பிறந்த நாளான இன்று (11.12.2025) காலை 9.30 மணியளவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சார்பில், சென்னை கடற்கரை, காமராசர் சாலையில் உள்ள பாரதியார் சிலைக்கு அமைச்சர்கள் மாலை அணிவித்து, மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்கள். இந்நிகழ்ச்சியில், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.